Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 176/2025
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.02 , Page.No. 43/2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரவி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கண்ணன் | தொழில் | ஓட்டல் வியபாரம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 54 |
| எதிரி ஆஜர் | | | 1 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 2-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 02nd day of April 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.2 திரு..ரவி முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டல் கடை வைத்து வியபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு நான் என் கடையில் இருந்த போது அ.சா.1 யை யாரோ சிலர் இரவு 10.00 மணியளவில் தாக்கி விட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தகவல் கிடைத்து நான் சென்று பார்த்த போது அவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது காயம் பட்ட அ.சா.1 யை சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.01.2025 அன்று அ.சா.1யை எதிரிகள் அசிங்கமாக திட்டி தாக்கி கொலைமிரட்டல் விடுத்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்து விட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை. மறுவிசாரணை இல்லை.**

**//True Copy//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupathur

**Judicial Magistrate No.I,**
**Tirupathur**

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 176/2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 03 , Page.No. 43/25

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தினேஷ்குமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. இராமமூர்த்தி | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 32 |
| எதிரி ஆஜர் | | | 1 |
| **எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை** | | | 2-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 02nd day of April 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.3 திரு.. தினேஷ்குமார் முதல் விசாரணை.-</u>**

1. நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு. சங்கர் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி. ஜெயலட்சுமி பணிமாறுதல் பெற்று சென்று விட்டதால் நான் இவ்வழக்கில் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.01.2025 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி நிலைய குற்ற எண்.17/2025 BNS பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 16.01.2025 அன்று மதியம் 15.00

மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திரு.சுரேஷ்குமார் மற்றும் சுபாஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தேன். (**அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே என்னால் அ.சா.ஆ.3, 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து விறகு கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிக்கொண்டார். (**அந்த கைப்பற்றுதல் மகசர் என்னால் அ.சா.ஆ.05 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்றும் வாக்குமூலமும் பெற்றார். (**அந்த காயச்சான்று என்னால் அ.சா.ஆ.06 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) பின்னர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), 351(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**//True Copy//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupathur

**Judicial Magistrate No.I,**
**Tirupathur**